*2023 மார்ச் 28*]

*ஆசிரியப் பெருமக்களின் திறனையும் வளர்க்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்திற்காக 180 கோடி ரூபாயை இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தக் கல்லூரியிலும் இதுபோன்ற அவசியம் இருக்குமானால், வருகின்ற காலங்களில் பரிசீலிக்கப்பட்டு, அதையும் நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**53—**

**கிராம நிருவாக அலுவலகக் கட்டடம்**

***8577—திரு. கு. செல்வபெருந்தகை:**

*மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, ஏகனாபுரம் ஊராட்சியில் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, ஏகனாபுரம் ஊராட்சியில் கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்டுவது தொடர்பாக கருத்துரு அரசளவில் ஏதும் நிலுவையில் இல்லை. மேற்படி கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் கட்டுவது தொடர்பாக*

[*2023 மார்ச் 28*

*உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து கிடைக்கப்பெற்றவுடன் அரசின் கருத்துரு பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

**திரு. கு. செல்வபெருந்தகை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. ஏகனாபுரம் ஊராட்சியில் 25 ஆண்டுகளுக்குமேல் கட்டிய அந்தக் கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் இப்போது பயன்படுத்த முடியாமல் இருக்கிறது. நானும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களும் அந்தப் பகுதிக்குப் போகும்போது, அந்தக் கிராமத்திலே 25 ஆண்டுகளாகப் பயன்படுத்த முடியாத நிலையில் அந்த அலுவலகம் இருக்கின்றது; அதனைச் செப்பனிட முடியுமா என்று கேட்டார்கள். இந்தியாவின் இதயம் என்று கிராமத்தைச் சொல்கிறார்கள். அந்தக் கிராமத்தினுடைய ஆல மரமாகவும், விழுதாகவும், வேராகவும் இருக்கின்ற, மனிதனுடைய வாழ்க்கையிலே நாடி நரம்பாகவும் உயிர் மூச்சாகவும் விளங்குகின்ற கிராம நிருவாக அலுவலர் அலுவலகத்தை உடனே நீங்கள் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து அலுவலகக் கட்டடத்திலேயே அந்தக் கிராம அலுவலர் அலுவலகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. புதிதாக வரக்கூடிய, ஏர்போர்ட்டில் ஏகனாபுரம் என்ற இந்த ஊர் வருகிறது. ஆகவே, அதையெல்லாம் கருத்திலே வைத்துக்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் பேசியிருக்கிறேன். அதற்குகேற்ப வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

*2023 மார்ச் 28]*

**திரு. கு. செல்வபெருந்தகை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றைக்குப் பேசும்போதுகூட சொன்னேன். இந்த சிட்டா, பட்டா, அடங்கல், அரசு சொத்துக்கள், நத்தம் புறம்போக்கு, ஏரிப் புறம்போக்கு, சாலைகள் போன்ற அரசுச் சொத்துக்கள் எல்லாவற்றையும் பாதுகாப்பது அந்தக் கிராம நிருவாக அலுவலர் அலுவலகம்தான். அதனால் அதை உடனே கட்டித் தர வேண்டும். ஏற்கெனவே கொடுத்த பட்டாவினை அடங்கலில் ஏற்றுவதும், மேய்க்கால் புறம்போக்குக்கு மின்சார வசதி கொடுப்பதும், கொடுக்க இயலாத பட்டாக்களை எல்லாம் பரிசீலித்து, முத்தமிழறிஞர் கலைஞர் கொடுத்ததற்கெல்லாம் நீங்கள் பட்டா கொடுப்பதற்கு ஆவன செய்யுமாறு துணைக் கேள்வியாகக் கேட்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் பேசியதை நான் கவனத்திலே வைத்துக்கொண்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு பேசியுள்ளேன். கலைஞர் காலத்திலே கொடுத்த அந்தப் பட்டா அரசு அடங்கலில் ஏறாமல் இருக்கிறது. அதையெல்லாம் ஏற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். மானியக் கோரிக்கையில் என்னுடைய பதிலுரையில் முழு விவரங்களைச் சொல்லி அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நிச்சயமாக எடுப்பேன். அதுவும் கலைஞர் கொடுத்த பட்டா என்கிற காரணத்தால் அதற்கு முன்னுரிமை நிச்சயமாக இருக்கும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.*

**திரு. ச. சிவகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மயிலம் சட்டமன்றத் தொகுதியில் மயிலம் ஒன்றியத்தில் முப்பள்ளி மற்றும் செண்டூரில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடம் அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2023 மார்ச் 28

**மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரை வருகிற நேரத்தில் நிச்சயமாக அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே விதி 110–ன்கீழ் அறிவிப்பு செய்திருக்கிறார்கள். ஊரக, உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக 600 கிராமச் செயலகக் கட்டடங்கள் கட்டப்படவிருக்கின்றன. அதிலே, பஞ்சாயத்து அலுவலகம் போக, வேறு என்னென்ன அலுவலகம் அந்தக் கிராமத்திலே இருக்கிறதோ, அதையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி வருகிற நேரத்திலே உங்களுடைய ஊரிலே அந்தக் கட்டடத்திலேயே கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் ஏற்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். சரவணக்குமார் அவர்கள்.

**திரு. கே.எஸ். சரவணக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தொகுதியில் 3, 4 கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்கள் கட்டப்பட வேண்டியுள்ளன. அதனை மாவட்ட ஆட்சியர்மூலம் முறையாக அனுப்பி வைக்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லிவிட்டார்களே!

**மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக பரிந்துரை வருகிற நேரத்தில் எந்தெந்த இடங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று அரசினுடைய அதிகாரிகளோடு கலந்துகொண்டு பேசி நிச்சயமாக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ் அவர்கள்.

**திரு. A.K. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம்

*2023 மார்ச் 28*]
வட்டத்திற்குட்பட்ட சிக்கதாசம்பாளையம் வருவாய்க் கிராமம், சிக்கதாசம்பாளையம் ஊராட்சியையும், மேட்டுப்பாளையம் நகராட்சியையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பேர் வசிக்கிற நகராட்சிக்கும், ஓர் ஊராட்சிக்கும் ஒரே ஒரு VAO அலுவலகம் இருக்கிறது. ஆகவே, இரண்டையும் தனித்தனியாகப் பிரித்து 2 கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களை அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகிறேன்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கோரிக்கை எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் உள்ளதுபோன்று எனக்கும் இருக்கிறது. பெரிய கிராமங்களைப் பிரிக்க வேண்டுமென்பது மட்டுமல்ல, பஞ்சாயத்தையும் பிரிக்க வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசனை மேற்கொண்டு, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்கள்.

**திரு. S. பழனி நாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எனது தென்காசி தொகுதி, சுரண்டை நகராட்சியிலுள்ள R.I. அலுவலகம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. அந்தக் கட்டடம் இடிந்துவிட்டது. ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், புதிதாக R.I. அலுவலகம் கட்டித் தர ஆவன செய்யுமாறு, தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுரண்டையில்தான் இருக்கிறார். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்

தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சுரண்டையில் R.I. அலுவலகம் கட்டுவதற்கு அவர் அனுமதி கேட்பார் என்று சொன்னால், நிச்சயமாக நாங்கள் அதற்கு அனுமதி தருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

**54—**

**மகளிர் சுய உதவிக் குழுக்கள்**

***11229—திரு. ஜி.கே. மணி:**

*மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் கடனுதவியை விரைந்து வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாய்ப்பை எனக்கு வழங்கியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) மகளிர் சுய உதவிக் குழுக்கள் நேரடி வங்கிக் கடன் பெற குறைந்தபட்சம் மாதம் ஒரு முறை, ஆறு மாதங்கள் தவறாது குழுக் கூட்டங்களை நடத்தி, சேமிப்பு செய்து, உள்கடன் வழங்கி, குறித்த காலத்தில் உள்கடனைத் திரும்பச் செலுத்தி, கணக்குப் புத்தகங்களை முறைப்படி பராமரித்து செயல்பாட்டில் இருக்க வேண்டும். அவ்வாறு செயல்பாட்டில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஒவ்வோராண்டும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, சுய உதவிக் கடன் விண்ணப்பத்தின் அடிப்படையில் உடனடியாக கடனுதவி அளிக்கப்பட்டு வருகிறது. அப்படிப் பெறப்பட்ட சுய உதவிக் கடன் விண்ணப்பங்கள் அனைத்தும் ஆய்வு செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில்*